RNI-NO: TNTAM/2021/83936

Postel Regd. No: TN/5/SVA/2023-2025




மாலை தந்தி
MALAI THANTHI
தமிழால் வெல்வோம்
DAILY EVENING
மாலை நாளிதழ்




சிவகங்கை | மலர்-4 | இதழ்- 288 | அக்டோபர்.19 2025 ஞாயிற்றுக்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ. 5

# இது எம்ஜிஆர் அதிமுக அல்ல... பழனிசாமி அதிமுக! டி.டி.வி.தினகரன் சாடல்



ராணிப்பேட்டை, அக்.19-

இப்போது இருப்பது எம்ஜிஆர் உருவாக்கிய அதிமுக அல்ல... இது பழனிசாமி உருவாக்கிய அதிமுக என அமமுக பொதுச்செயலாளர் டி.டி.வி.தினகரன் தெரிவித்தார்.

ராணிப்பேட்டை மாவட்டம் சோளிங்கர் தொகுதி அமமுக செயல்வீரர்கள் கூட்டம் நேற்று சோளிங்கரில் நடைபெற்றது. இதில் கலந்து கொண்ட அமமுக பொதுச்செயலாளர் டி.டி.வி.தினகரன் பின்பு செய்தியாளர்களிடம் பேசியதாவது: அதிமுகவை உருவாக்கிய எம்ஜிஆர் அந்தக் கட்சிக்காக வகுத்த விதிகளை எல்லாம் எடப்பாடி பழனிசாமி நீக்கிவிட்டார். விதிகளை திருத்தி தன்னை கட்சியின் பொதுச்செயலாளராக அறிவித்துக் கொண்டார். ஆனால், எம்ஜிஆரின் உண்மையான விசுவாசிகள் என்னுடன் தான் இருக்கிறார்கள். கட்சியிலிருந்து களைகளை நீக்கிவிட்டதாக பழனிசாமி சொல்கிறார். உண்மையில் அவர் துரோகத்தின் நச்சுச் செடியாக இருந்து கட்சியை அழித்து வருகிறார். தற்போது இருப்பது உண்மையான அதிமுக அல்ல. இது பழனிசாமி உருவாக்கிய அதிமுக. வரும் தேர்தலில் அமமுக கூட்டணி துரோகிகளுக்கு பாடம் புகட்டுவதோடு மட்டுமல்லாது வெற்றிக் கூட்டணியாகவும் அமையும்.

முந்தைய அரசு வாங்கிவைத்த கடன்களை இப்போதுள்ள அரசு அடைப்பது போல், இப்போது ஆட்சியில் இருப்பவர்கள் வாங்கி வைக்கும் கடன்களை அடுத்து வருபவர்கள் அடைப்பார்கள். இந்தியா வளர்ந்து வரும் நாடு. அதில், தமிழ்நாடு வளர்ச்சியை நோக்கி பயணித்து வருகிறது. ஆனாலும் இன்னமும் இங்கு பலதரப்பட்ட மக்களின் வாழ்வாதாரம் முன்னேறாமலேயே இருக்கிறது. அவர்களுக்கான திட்டங்களை அரசு அறிவித்து செயல்படுத்தலாம். ஆனால், இலவச திட்டங்க ள்தான் அதிகமாக உள்ளது. இதுபற்றி அரசியல்வாதிகள் சிந்திக்க வேண்டும். மக்களும் தேவையற்ற இலவச திட்டங்களை அரசு அறிவித்தால் புறந்தள்ள வேண்டும். திமுக அரசு, அறிவித்த பல திட்டங்களை நிறைவேற்ற முடியாமல் விழிபிதுங்கி நிற்கிறது. பாஜக தலைவர் நயினார் நாகேந்திரனின் முதல்வர் கனவு பலிக்காது.

கரூரில் நடந்த துயரச் சம்பவம் ஒரு விபத்து; அதில் சதிவேலை எதுவும் இல்லை. அந்தச் சம்பவத்துக்காக விஜய், காவல்துறையினர் உள்ளிட்ட யார் மீதும் குற்றம் சொல்ல முடியாது. சில கட்சிகள் இதை அரசியல் ஆக்குகின்றன. அதேசமயம், இந்த சம்பவம் தொடர்பாக சிபிஐ விசாரணைக்கு உத்தரவிடப்பட்டுள்ளது. அவர்கள் தான் விசாரித்து உண்மையைச் சொல்ல வெண்டும்.



# “கரூர் துயரத்தில் இருந்து மீள முடியவில்லை” சிறையில் இருந்து வெளியான தவெக மாவட்டச் செயலாளர் பேட்டி

சென்னை, அக்.19-

“கரூர் துயர சம்பவத்தில் 41 பேர் உயிரிழந்த நிலையில், அதிலிருந்து மீண்டு வர முடியாமல் இருக்கிறேன்” என்று சேலம் கிழக்கு மாவட்ட செயலாளர் வெங்கடேசன் கூறினார்.

தவெக தலைவர் விஜய் கடந்த மாதம் 27ம் தேதி கரூரில் மேற்கொண்ட மக்கள் சந்திப்பு பயணத்தின் போது 41 பேர் உயிரிழந்தனர். இச்சம்பவத்தின் போது ஆம்புலன்ஸ் வாகனத்துக்கு இடையூறு ஏற்படுத்தி, டிரைவரை தாக்கியதாக தொடரப்பட்ட வழக்கில், தவெக சேலம் கிழக்கு மாவட்டச் செயலாளர் வெங்கடேசன் கைது செய்யப்பட்டு, திருச்சி மத்திய சிறையில் அடைக்கப்பட்டார்.

அவர் ஜாமீன் கேட்டு கடந்த 13ம் தேதி கரூர் மாவட்ட நீதிமன்றத்தில் வழங்கிய மனு தள்ளுபடி செய்யப்பட்டது. அதையடுத்து சென்னை உயர் நீதிமன்ற மதுரை கிளையில் ஜாமீன் மனு தாக்கல் செய்யப்பட்டது. அவருக்கு ஜாமீன் வழங்கப்பட்டதை தொடர்ந்து இன்று காலை திருச்சி மத்திய சிறையில் இருந்து தவெக சேலம் கிழக்கு மாவட்ட செயலாளர் வெங்கடேசன் விடுவிக்கப்பட்டார்.

தனது வழக்கறிஞர்களோடு வெளியே வந்த அவர் சிறை வளாகத்தில் செய்தியாளர்களிடம் கூறியபோது “கரூர் துயர சம்பவத்தில் 41 பேர் உயிரிழந்த நிலையில் அதிலிருந்து மீண்டு வர முடியாமல் இருக்கிறேன். மற்றவைகள் குறித்து தலைமையில் இருந்து பேசுவார்கள்” என்றார்.

வழக்கறிஞர் அணி மாநில இணை ஒருங்கிணைப்பாளர் செல்வ பாரதி கூறியபோது, “தவெக நிர்வாகிகளை அடக்க வேண்டும்; ஒடுக்க வேண்டும் என்ற நோக்கத்தில் வெங்கடேசன் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டு கைது செய்யப்பட்டார். அவர் ஜாமீனில் வெளியே வரக்கூடாது என தமிழக அரசு பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டது. இந்த சம்பவத்தில் எவ்வளவு இழப்பீடு என்று எஃப்.ஐ.ஆரில் குறிப்பிடப்படவில்லை.

ஒரு சம்பவத்திற்கு இரண்டு எஃப்.ஐ.ஆர் போடப்பட்டுள்ளது. பல்வேறு அழுத்தத்தின் காரணமாக பொய்யாக புனையப்பட்ட வழக்கு. நீதிமன்றத்தில் நியாயத்தை எடுத்துச் சொன்னோம். அதையடுத்து நீதிபதி எங்கள் பக்கம் நியாயம் இருக்கிறது என்று கூறி ஜாமீன் வழங்கினார். இவர் மீது தப்பில்லை என்பதை சட்டரீதியாக நீதிமன்றத்தில் நிரூபிப்போம். ஒரு வாரத்திற்கு காவல் நிலைய த்தில் கையெ முத்திட வேண்டும் என்ற நிபந்தனையின் அடிப்படையில் ஜாமீன் வழங்கப் பட்டுள்ளது” என்றார்.

# தீபாவளிக்கு மறுநாள் அரசு விடுமுறை

சென்னை, அக்.19-

தமிழக அரசு வெளியிட்ட செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது: அக்.20 ம் தேதி தீபாவளியை முன்னிட்டு சொந்த ஊர்களுக்குச் சென்று திரும்பும் மாணவர்கள், அரசு அலுவலர்கள் மற்றும்பொதுத் துறை நிறுவனங்களில் பணிபுரியும் ஊழியர்கள் நலனை கருத்தில் கொண்டு, அக்.21ம் தேதி, தமிழகம் முழுவதும் உள்ள அனைத்து அரசு அலுவலகங்கள், பொதுத்துறை நிறுவனங்கள், பள்ளிகள், கல்லூரிகள் மற்றும் கல்வி நிறுவனங்களுக்கு விடுமுறை அளிக்கவும், அந்த விடுமுறை தினத்தை ஈடு செய்யும் வகையில் அக்.25ம் தேதி பணி நாளாக அறிவித்து உத்தரவிடப்படுகிறது. இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# மொத்த பாகிஸ்தானும் பிரம்மோஸ் ஏவுகணையின் வரம்புக்குள் உள்ளது: ராஜ்நாத் சிங்

லக்னோ: அக்.19-

பாகிஸ்தானின் ஒவ்வொரு அங்குலமும் நமது பிரம்மோஸ் ஏவுகணையின் வரம்புக்குள்தான் உள்ளது என பாதுகாப்புத் துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் தெரிவித்துள்ளார்.

உத்தரப்பிரதேசத்தின் லக்னோவில் அமைக்கப்பட்ட பிரம்மோஸ் ஏவுகணை உற்பத்தி மற்றும் சோதனை மையத்தில் இருந்து முதல் தொகுப்பு பிரம்மோஸ் ஏவுகணைகள் வெற்றிகரமாக வெளியாகி உள்ளன. பிரம்மோஸ் ஏவுகணைகளின் முதல் தொகுதியை பாதுகாப்புத் துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் கொடியசைத்து தொடங்கிவைத்தார்.




நிகழ்ச்சியில் பேசிய ராஜ்நாத் சிங், “நமது ராணுவத்தின் வெற்றி என்பது நிகழும் ஒரு சம்பவம் அல்ல; மாறாக அது நமது ராணுவத்தின் வழக்கம் என்பதை ஆபரேஷன் சிந்தூர் நிரூபித்துவிட்டது. நமது எதிரிகள் இனி பிரம்மோஸ் ஏவுகணையிடம் இருந்து தப்பிக்க முடியாது என்று நாடு நம்பிக்கை கொண்டுள்ளது. பாகிஸ்தானின் ஒவ்வொரு அங்குலமும் நமது பிரம்மோஸ் ஏவுகணை அடையும் வரம்புக்குள்தான் உள்ளன.

ஆபரேஷன் சிந்தூர் ராணுவ நடவடிக்கையின்போது நடந்தது வெறும் ட்ரெய்லர் மட்டுமே. அந்த ட்ரெய்லரே, இந்தியா மறுபிறப்பை கொடுத்துள்ளது என பாகிஸ்தான் எண்ணிப் பார்க்கும் வகையில் அமைந்துவிட்டது. அப்படியானால், நமது முழுப் பலமும் வெளிப்படுமானால்.. அதற்கு மேல் நான் சொல்ல விரும்பவில்லை.

பிரம்மோஸ் குழுவினர் ஒரு மாதத்துக்குள் இரண்டு நாடுகளுடன் ரூ.4,000 கோடி மதிப்புள்ள ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டுள்ளார்கள். வரும் ஆண்டுகளில், வெளிநாடுகளைச் சேர்ந்த நிபுணர்கள் லக்னோவுக்கு வருவதைக் காண்போம். லக்னோவில் உள்ள இந்த பிரம்மோஸ் மையம், ஒரு அறிவு மையமாகவும் பாதுகாப்பு தொழில்நுட்பத்தில் முன்னணி நிறுவனமாகவும் வரும் ஆண்டுகளில் மாறும். அடுத்த நிதியாண்டில் இருந்து பிரம்மோஸ் லக்னோ பிரிவின் ஆண்டு வருவாய் ரூ. 3,000 கோடியாக இருக்கும். ஜிஎஸ்டி வருவாய் ரூ. 5,000 கோடியாக இருக்கும்" என தெரிவித்தார். இந்நிகழ்ச்சியில், உத்தரப்பிரதேச முதல்வர் யோகி ஆதித்யநாத் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

# வங்கக்கடலில் அக்.21ல் காற்றழுத்த தாழ்வுப் பகுதி உருவாகிறது: தமிழகத்தில் கனமழைக்கு வாய்ப்பு

சென்னை, அக்.19-

தென் கிழக்கு வங்கக்கடலில் அக்.21 ம் தேதி வாக்கில் புதிய காற்றழுத்த தாழ்வு பகுதி உருவாகக்கூடும். இதன் காரணமாக தமிழகத்தில் நாளை முதல் 24ம் தேதி வரை கனமழை பெய்ய வாய்ப்புள்ளது.

இது தொடர்பாக சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்ட செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:

மன்னார் வளைகுடா மற்றும் அதனை ஒட்டிய பகுதி களின் ஒரு வளிமண்டல கீழடுக்கு சுழற்சி நிலவுகிறது. தென்கிழக்கு அரபிக்கடல் மற்றும் லட்சத்தீவு பகுதிகளில், கேரள கர்நாடக கடலோர பகுதிகளுக்கு அப்பால் ஒரு காற்றழுத்த தாழ்வு பகுதி உருவாகி, ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு பகுதியாக வலுப்பெற்றுள்ளது. இது நாளை காற்றழுத்த தாழ்வு மண்டலமாக வலுப்பெறக்கூடும்.

தென்கிழக்கு வங்கக்கடல் பகுதிகளில் 21ம் தேதி வாக்கில், ஒரு காற்றழுத்த தாழ்வு பகுதி உருவாகக்கூடும். இது, மேற்குவடமேற்கு திசையில் நகர்ந்து வலுப்பெறக்கூடும். இதன் காரணமாக தமிழகத்தில் நாளையும் (அக்.19), நாளை மறுதினமும், 23, 24 தேதிகளிலும் பெரும்பாலான இடங்களிலும், 21, 22 தேதிகளில் ஒருசில இடங்களிலும் இடி, மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்ய வாய்ப்புள்ளது.

தமிழகத்தில் நாளை கோவை மாவட்ட மலைப்பகுதிகள், நீலகிரி, ஈரோடு, திருப்பூர், தேனி, தென்காசி, திருநெல்வேலி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களிலும், 20ம் தேதி செங்கல்பட்டு, விழுப்புரம், புதுக்கோட்டை, ராமநாதபுரம், கள்ளக்குறிச்சி, நீலகிரி, கோவை மாவட்ட மலைப்பகுதிகள், திருப்பூர், ஈரோடு, கரூர், நாமக்கல், மதுரை, சிவகங்கை, விருதுநகர், திண்டுக்கல், டெல்டா மாவட்டங்களான தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், மயிலாடுதுறை மாவட்டங்களில் ஓரிரு இடங்களிலும், புதுச்சேரி, காரைக்கால் பகுதிகளிலும் கனமழை பெய்யக்கூடும்.

21ம் தேதி விழுப்புரம், செங்கல்பட்டு, கடலூர், மயிலாடுதுறை, நாகப்பட்டினம் மாவட்டங்க ளிலும். 22ம் தேதி திருவள்ளூர், சென்னை, செங்கல்பட்டு, காஞ்சிபுரம், விழுப்புரம், ராணிப்பேட்டை மாவட்டங்களில் ஓரிரு இடங்களிலும் மற்றும் புதுவை யிலும் கன முதல் மிக கனமழையும், கடலூர், கள்ளக்குறிச்சி, திருவண்ணாமலை, திருப்பத்தூர் மற்றும் வேலூர் மாவட்ட ங்களில் ஓரிரு இடங்களில் கனமழையும் பெய்ய வாய்ப்புள்ளது.

23 ம் தேதி திருவள்ளூர், சென்னை, செங்கல்பட்டு, காஞ்சிபுரம், ராணிப்பேட்டை மற்றும் வேலூர் மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் கன முதல் மிக கனமழையும், நீலகிரி, கோவை மாவட்ட மலைப்பகுதிகள், திருவண்ணாமலை மற்றும் திருப்பத்தூர் மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் கனமழையும் 24ம் தேதி நீலகிரி, கோவை மாவட்ட மலைப்பகுதிகள், திண்டுக்கல், தேனி மற்றும் தென்காசி மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் கனமழையும் பெய்யக்கூடும்.

சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் நாளை வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். நகரின் ஒருசில பகுதிகளில் இடி, மின்னலுடன் கூடிய லேசான அல்லது மிதமான மழை பெய்ய வாய்ப்புள்ளது தென்தமிழக கடலோரப்பகுதிகள், மன்னார் வளைகுடா மற்றும் குமரிக்கடல் பகுதிகளில் நாளை முதல் 22ம் தேதி வரை சூறாவளிக்காற்று மணிக்கு 35 முதல் 45 கிமீ வேகத்திலும், இடையிடையே 55 கிமீ வேகத்திலும் வீசக்கூடும். எனவே இப்பகுதிகளுக்கு மீனவர்கள் செல்ல வேண்டாம்.

தமிழகத்தில் இன்று காலை 8.30 மணியுடன் நிறைவடைந்த 24 மணி நேரத்தில் பதிவான மழை அளவுக ளின்படி அதிகபட்சமாக விருதுநகர் மாவட்டம் ராஜபாளையத்தில் 18, திருவள்ளூர் மாவட்டம் கும்மிடிப்பூண்டியில் 16 செமீ, தேனி மாவட்டம் தேக்கடியில் 16 செமீ, திருவள்ளூர் மாவட்டம் பொன்னேரியில் 14 செமீ, தூத்துக்குடி மாவட்டம் காயல்பட்டினம், நீலகிரி மாவட்டம் குன்னூரில் தலா 12 செமீ, தூத்துக்குடி மாவட்டம் கழுகுமலை, நீலகிரி மாவட்டம் அழகரை எஸ்டேட்டில் தலா 11 செமீ மழை பதிவாகியுள்ளது. இவ்வாறு செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

# தி.நகரில் கேமராவுடன் வானில் வட்டமடிக்கும் ட்ரோன்கள்: தீபாவளி பாதுகாப்பு பணியில் 18 ஆயிரம் போலீஸார்

சென்னை, அக்.19-

தீபாவளிப் பண்டிகையை முன்னிட்டு சென்னையில் பாதுகாப்புப் பணியில் 18 ஆயிரம் போலீஸார் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். மேலும் கூட்ட நெரிசலைப் பயன்படுத்தி நடைபெறும் திருட்டை தடுக்கும் வகையில் வணிக வீதிகளில் சாதாரண உடையில் போலீஸார் கண்காணித்து வருகின்றனர். தீபாவளிப் பண்டிகைக்கு இன்னும் 2 நாட்களே உள்ள நிலையில் புத்தாடைகள், பொருட்களை வாங்குவதற்காக மக்கள் நகரின் முக்கிய பகுதிகளில் திரண்டு வருகின்றனர்.

குறிப்பாக தி.நகர், பாண்டிபஜார், புரசைவாக்கம், மயிலாப்பூர், பூக்கடை, வண்ணாரப்பேட்டை, கோயம்பேடு ஆகிய பகுதிகளில் கூட்டம் அதிகமாக உள்ளது. இதையடுத்து பாதுகாப்புப் பணியில் 18 ஆயிரம் போலீஸார் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

இந்நிலையில் பண்டிகையை ஒட்டி மேற்கொள்ளப்பட்டுள்ள பாதுகாப்பு ஏற்பாடுகள் குறித்து காவல் ஆணையர் அருண் நேற்று வெளியிட்ட செய்திக்குறிப்பு: தீபாவளிப் பண்டிகையை முன்னிட்டு கூட்ட நெரிசலை கட்டுப்படுத்துதல், குற்ற தடுப்பு முறைகள், போக்குவரத்து நெரிசல் ஏற்படாமல் வாகனங்களை ஒழுங்குபடுத்துதல் ஆகிய 3 விதமான பணிகளில் 18 ஆயிரம் போலீஸார் ஈடுபட்டுள்ளனர்.

தி.நகரில் 8, வண்ணாரப்பேட்டை2, கீழ்ப்பாக்கம்4, பூக்கடை2 என 4 இடங்களிலும் மொத்தம் 16 தற்காலிக கண்காணிப்பு கோபுரங்கள் அமைக்கப்பட்டுள்ளன. அதில் இருந்தவாறு போலீஸார் சுழற்சி முறையில் 24 மணி நேரமும் கண்காணித்து வருகின்றனர்.

தி.நகர், வண்ணாரப்பேட்டை, புரசைவாக்கம், பூக்கடை பகுதிகளில் மொத்தம் 4 தற்காலிகக் காவல் கட்டுப்பாட்டறைகள் மற்றும் தற்காலிக உதவி மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. சிசிடிவி கேமரா பதிவுகளை கண்காணித்தல், குற்றவாளிகள் நடமாட்டத்தை கண்காணித்தல், கூட்டத்தில் தொலையும் குழந்தைகளை உரியவர்களிடம் ஒப்படைத்தல் போன்ற பணிகளுக்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

தி.நகர் மற்றும் வண்ணாரப்பேட்டை பகுதியில் கூடுதலாக சிசிடிவி கேமராக்களை பொருத்தி, அதன்மூலம் குற்றங்கள் நிகழாமல் கண்காணிக்கப்பட்டு வருகிறது. தி.நகரில் 4 ட்ரோன் கேமராக்கள் மூலம் கூட்ட நெரிசல் உள்ள பகுதிகளில் கண்காணிக்கப்பட்டு வருகிறது.

பழைய குற்றவாளிகளை கண்டுபிடிப்பதற்காக முகம் அடையாளம் காணும் (எப்ஆர்எஸ்) செல்போன் செயலி மூலம் போலீஸார் சுழற்சி முறையில், குழுக்களாகப் பிரிந்து கண்காணித்தும், வாட்ஸ் அப் குழு தொடங்கி முக்கிய நிகழ்வுகளை உடனுக்குடன் பரிமாற்றம் செய்தும், குற்றச் செயல்கள் நடக்காமல் காத்தும் வருகின்றனர்.

மேலும் வாகனங்களில் ரோந்துப் பணியும் முடுக்கிவிடப்பட்டுள்ளது. பொருட்கள் வாங்க வரும் பெண்களின் கழுத்தில் உள்ள தங்க நகைகள் திருடப்படாமல் தடுக்க, கழுத்தில் துணிகளைச் சுற்றி கவசமாக கட்டிக்கொள்ள வலியுறுத்தப்பட்டு, துணி கவசங்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

பொதுமக்கள் அதிகளவில் கூடும் இடங்களில் குற்றச் சம்பவங்களில் ஈடுபடும் நபர்களைக் கண்காணிக்க சாதாரண உடையில் ஆண், பெண் போலீஸார் பணியமர்த்தப்பட்டுள்ளனர். இவ்வாறு காவல் ஆணையர் தெரிவித்துள்ளார்.

# ஸ்டார் ஹெல்த் இன்சூரன்ஸ் இலவச மெகா மருத்துவ முகாம்

கோவை, அக்.19-

கோவை ஆவாரம் பாளையம் பகுதியில் உள்ள தனியார் கூட்டரங்கில் ஸ்டார் ஹெல்த் இன்சூரன்ஸ் முகவர்களுக்கும் குடும்பத்தினருக்கும் இலவச மெகா மருத்துவ முகாம் நடைபெற்றது.

இம்முகாமிற்கு சிறப்பு விருந்தினராக மேயர் ரங்கநாயகி ராமச்சந்திரன் கலந்து கொண்டு குத்து விளக்கேற்றிரிப்பன் வெட்டி துவக்கி வைத்தார்.





இம்முகாமில் 500க்கும் மேற்பட்டோர் பயனடைந்தனர். மேலும் பல முன்னணி மருத்துவமனைகள் மற்றும் மருத்துவ நிறுவனங்களுக்கும் அவர்களின் குடும்பத்தினருக்கும் முன்னெச்சரிக்கை மருத்துவ சேவைகள் மற்றும் நலத்திட்டங்களை இணைந்து, முகவர்களுக்கும் முன்னெடுக்க நடைபெற்றது. இதில் பொது மருத்துவம், எலும்பியல். மகளிர் நலம், கண், பல், உடற்பயிற்சி ஒருங்கிணைந்த முகாமில், தலா ரூ.6,000 மதிப்பிலான சேவைகளை மற்றும் ஊட்டச்சத்து ஆலோசனை ஆகிய பல்வேறு பரிசோதனைகள் வழங்கினர்.

பாலாஜிபாபு பிசினஸ் ஹெட் முகவர்களின் நலனுக்காக இத்தகைய மருத்துவ முகாம்களை நடத்துவதின் முக்கியத்துவத்தை வலியுறுத்தி, அவர் கோயம்புத்தூர் மண்டலம் இந்நிதியாண்டில் ரூ.210+ கோடி புதிய வணிகத்தையும், ரூ.143.50 கோடி மதிப்பிலான 23,800+ கிளைம்ஸ்களை தீர்வு செய்துள்ளதையும் குறிப்பிட்டார்.

ஸ்ரீராம் ரகுநந்தனன் சி ஹெஸ் ஆர் ஒ ஸ்டார் ஹெல்த் இன்சூரன்ஸ் நிறுவனத்தின் முகவர் நலனை முன்னெடுத்தல் பற்றிய முக்கியத்துவத்தை எடுத்துரைத்தார்.

இந்நிகழ்வில் பிரபு ராஜமாணிக்கம் ஜோனல் ஹெட் ஊழியர்கள், முகவர்கள், மண்டல மேலாளர்கள், கிளை மேலாளர்கள் மற்றும் டாக்டர் ஹரிதா வாசுதேவன் ஆப்ரேசன் தலைமை, வாசன் ஐ கேர்

டாக்டர் ஹசீப் கான் எம்டி, ஏரோ மல்டி ஸ்பெஷாலிட்டி மருத்துவமனை முகுந்த் கிளை மேலளார்கள் பழனிசாமி சரவணன் குணசேகர் டாக்டர் சௌம்யா ஜோனல் கிளைம் ஹெட் மற்றும் கோவை குழுவினர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்

# தென்காசி மாவட்ட ஆட்சித்தலைவர் ஏ.கே.கமல்கிஷோர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு

தென்காசி, அக்.19-

தென்காசி மாவட்டத்தில் நடப்பு பருவத்தில் நெல், மக்காச்சோளம், உளுந்து, பாசிப்பயறு, பருத்தி, நிலக்கடலை, கரும்பு போன்ற வேளாண்மைப் பயிர்களும் பல்வேறு தோட்டக்கலை பயிர்களும் சாகுபடி செய்யப்படுகின்றன. அவற்றுக்கு தற்போது தேவையான உரங்கள் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கங்கள் மற்றும் தனியார் உரக்கடைகளில் இருப்பு வைக்கப்பட்டுள்ளன. 17.10.2025 நிலவரப்படி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கங்களில் 880 டன் யூரியா, 445 டன் டி.ஏ.பி, 320 டன் பொட்டாஷ், 600 டன் காம்ப்ளக்ஸ், 26 டன் சூப்பர் பாஸ்பேட் உரங்கள் இருப்பு உள்ளன. தனியார் சில்லரை விற்பனையாளர்களிடம் 1744 டன் யூரியா, 442 டன் டி.ஏ.பி, 190 டன் பொட்டாஷ், 2006 டன் காம்ப்ளக்ஸ், 147 டன் சூப்பர் பாஸ்பேட் உரங்கள் இருப்பு உள்ளன. மேலும் தொடர்ந்து தேவைகளுக்கு ஏற்ப உரிய நேரங்களில் தேவையான அளவில் அனைத்து உரங்களும் கிடைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளன.




விவசாயிகள் அதிக அளவில் இயற்கை உரங்கள், பசுந்தாள் உரங்கள், பசுந்தழை உரங்கள், உயிர் உரங்களை பயன்படுத்துமாறும் மண் பரிசோதனை செய்து தேவையான அளவில் மட்டும் இரசாயன உரங்களை பயன்படுத்துமாறும் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

இராயன உரங்களில் தழை, மணி, சாம்பல் சத்துக்கள் உள்ள உரங்கள் அதிக அளவில் தேவைப்படுபவை ஆகும். யூரியா உரம் தழைச்சத்து மட்டும் வழங்கும். சூப்பர் பாஸ்பேட் உரங்கள் மணிச்சத்து மட்டும் வழங்கும். பொட்டாஷ் உரங்கள் சாம்பல் சத்து மட்டும் வழங்கும். காம்ப்ளக்ஸ் உரங்களில் ஒன்றுக்கு மேற்பட்ட சத்துக்கள் இருக்கும். டை அம்மோனியம் பாஸ்பேட் என்ற டி.ஏ.பி உரத்தில் தழைச்சத்தும், மணிச்சத்தும் இருக்கும். 20:20:0:13 என்ற காம்ப்ளக்ஸ் உரத்தில் 20 சதவீதம் தழைச்சத்தும், 20 சதவீதம் மணிச்சத்தும் 13 சதவீதம் கந்தகச் சத்தும் இருக்கும். சாம்பல் சத்து இருக்காது. அதாவது காம்ப்ளக்ஸ் உரங்களில் முதலில் தழைச்சத்து அளவும், இரண்டாவது மணிச்சத்து அளவும், மூன்றாவது சாம்பல் சத்து அளவும், நான்காவது கந்தகச்சத்து இருந்தால் அதன் அளவும் கொடுக்கப்பட்டிருக்கும். விவசாயிகள் மண் பரிசோதனை செய்து பயிர்களின் தேவைகளை அறிந்து அதற்கு ஏற்ப தேவையான உரங்களை வாங்கி பயன்படுத்துமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது. தேவையில்லாத பொருட்களையும் சேர்த்து வாங்குமாறு எந்த விற்பனையாளராவது வற்புறுத்தினாலும், கூடுதல் விலை கேட்டாலும், இருப்பில் வைத்துக் கொண்டு உரங்களை விற்பனைக்கு கொடுக்க மறுத்தாலும் உடனடியாக வேலை நேரங்களாக இருந்தால் வேளாண்மை இணை இயக்குநர் அலுவலக தொலைபேசி எண். 04633295430க்கு புகார் தெரிவிக்கலாம். மேலும் எந்த நேரத்திலும் புகார்கள் இருந்தால் வட்டார வேளாண்மை அலுவலர்களுக்கோ, வேளாண்மை உதவி இயக்குநர்களுக்கோ அலைபேசியில் தொடர்பு கொண்டு தெரிவிக்கலாம். குறுஞ்செய்தியும் அனுப்பலாம்.

அலைபேசி எண்கள் வேளாண்மை உதவி இயக்குநர் (தகவல் மற்றும் தரக்கட்டுப்பாடு) 9791792915, வேளாண்மை உதவி இயக்குநர்கள் ஆலங்குளம், கடையம் 9486629920, கடையநல்லூர் 9790139254, கீழப்பாவூர் 9894236933, குருவிகுளம் 9442533822, மேல நீலிதநல்லூர் 8903925406, சங்கரன்கோவில் 9629582564, தென்காசி, செங்கோட்டை 9578710856, வாசுதேவநல்லூர் 8667053064 வட்டார வேளாண்மை அலுவலர்களின் அலைபேசி எண்கள் ஆலங்குளம் 6381070996, கடையம் 7598196343, கடையநல்லூர் 9585783993, கீழப்பாவூர் 6381178973, குருவிகுளம் 9787920912, சங்கரன்கோவில் 9942286502, தென்காசி, செங்கோட்டை 9442892564, வாசுதேவநல்லூர் 9500604416.

விவசாயிகள் இயற்கை உரங்களையும், உயிர் உரங்களையும், பசுந்தாள் உரங்களையும், பசுந்தழை உரங்களையும், அதிக அளவில் பயன்படுத்தி மண்பரிசோதனை செய்து தேவையான அளவு மட்டுமே இரசாயன உரங்களை பயன்படுத்த வேண்டும் என கேட்டுக்கொள்ளப்படுகிறது. இரசாயன உரங்கள் போதுமான அளவு தென்காசி மாவட்டம் முழுவதும் இருப்பு உள்ளது என்ற விபரம் தெரிவிக்கப்படுகிறது. மேலும் விபரங்களுக்கு தங்கள் பகுதியின் வேளாண்மைத்துறை அலுவலர்களை தொடர்பு கொள்ளலாம் என மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ஏ.கே.கமல்கிஷோர், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

## ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி கீழக்கோட்டையில் பனை விதைகள் நடும் விழா

# தமிழ்நாடு அரசின் கனவு திட்டமான மாநில மரமான பனை மரத்தை பாதுகாக்கும் விதமாக ஆறு கோடி பனை மரங்களை உருவாக்கும் நோக்கில்

காளையார் கோவில், அக்.19-

சிவகங்கை மாவட்டத்தில் 10 லட்சம் பனை விதைகள் நடும் தொடக்க விழாவை வேட்டங்குடி பறவைகள் சரணாலய கண்மாய் பகுதியில் சிவகங்கை மாவட்ட ஆட்சியர் தொடங்கி வைத்து 445 கிராம ஊராட்சிகளிலும் பனை விதைகள் நடும் பணிகள் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அதன் தொடர்ச்சியாக காளையார்கோவில் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி கீழக்கோட்டையில் காலாண்டு விடுமுறையில் சேகரித்து வைத்துள்ள 2000 பனை விதைகள் நடும் விழா சிறப்பாக நடைபெற்றது. பள்ளியின் தலைமை ஆசிரியை தெய்வானை தலைமை வகித்தார். ஆங்கில பட்டதாரி ஆசிரியை கீதா முன்னிலை வகித்தார். ஆசிரியை வாசுகி வரவேற்றார். தமிழ்நாடு அறிவியல் இயக்க மாவட்டச் செயலாளர் இந்திய செஞ்சிலுவை சங்கத்தின் காளையார் கோவில் துணைத்தலைவர் ஆரோக்கியசாமி கூறும்போது பனை மரம் தமிழ்நாட்டின் பாரம்பரிய அடையாளம் மற்றும் மாநில மரமாகும். இதன் ஒவ்வொரு பகுதியும் பயன்பாடு உடையது. புயலை தாங்கும் தன்மையுடையது. நிலத்தடி நீரை பெருக்கும். மேலும் பனம்பழம் பதநீர் கருப்பட்டி பனங்கற்கண்டு பனை ஓலை மூலம் கூடை கைவினைப் பொருட்கள் ஓலை விசிறி பனை ஓலை காற்றாடி பொம்மைகள் ஓலைச்சுவடி போன்ற எண்ணற்ற பொருட்களைத் தயாரிக்கலாம். பனைமரத்தின் வேர் முதல் நுனி வரை அனைத்தும் பயன் தருகின்றன. இதனால் இதற்கு கற்பகத்தரு அதாவது தேவலோகத்து மரம் என்ற சிறப்பு பெயரும் உண்டு. பனை மரத்தின் வேர்கள் நீரை தக்க வைத்து நிலத்தடி நீர்மட்டத்தை உயர்த்துவதற்கும் உதவுகிறது. புயல் போன்ற இயற்கை சீற்றங்களை தாங்கும் வல்லமை கொண்டது. பனை மரங்கள் பல்லுயிர் பெருக்கத்திற்கான ஒரு முக்கிய வாழிடமாக விளங்குகின்றன.







பனை மரத்தின் சிறப்பை உணர்ந்து தமிழகத்தில் அதன் பயன்பாடுகளைப் போற்றும் வகையில் பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. தமிழக அரசு பனை மரத்தை பாதுகாப்பதற்காக பனை மரங்களை வெட்ட இனி மாவட்ட ஆட்சியரின் அனுமதி அவசியம் என்ற அரசாணையை வெளியிட்டுள்ளது. ஒரு பனைமரம் வெட்டப்பட்டால் அதற்கு பதிலாக பத்து மரக்கன்றுகளை நடவு செய்ய வேண்டும் எனவும் அரசு உத்தரவிட்டுள்ளது. இது மட்டுமன்றி சுற்றுச்சூழல் சமநிலை பொருளாதாரம் மற்றும் பாரம்பரியத்தை பாதுகாக்கவும் நீர் மற்றும் நில வளத்தை மேம்படுத்தவும் பனை மரங்கள் நடப்படுகின்றன. கடலோர மாவட்டங்களில் ஒரு கோடி பனை விதைகளை நடும் திட்டத்தை அரசு தொடங்கி யுள்ளதை தொடர்ந்து மாவட்டந்தோறும் 6 கோடி பனை மரங்கள் நடும் திட்டத்தில் நாமும் இணைந்து அனைத்து மக்களிடமும் விழிப்புணர்வை ஏற்படுத்தி இத்திட்டத்தை சிறப்பாக செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். கணித பட்டதாரி ஆசிரியை மீனாட்சி நன்றி கூறினார். தொடர்ந்து பத்து நாட்களில் 2000 பனை விதைகள் விதைப்பதற்கு திட்டமிடப்பட்டு பனை விதைகள் தொடர்ந்து மகிழ் முற்றம் சுற்றுச்சூழல் மன்ற மாணவர்களைக் கொண்டு சிறப்பாக நடப்பட்டு வருகிறது. ஆசிரியை கமலம்பாய் கணினி பயிற்றுநர் வித்யா பள்ளி மேலாண்மைக்குழு உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

## திருமலாபுரம் அரசு மேல்நிலைப்பள்ளியில் நடைபெற்ற “நலம் காக்கும் ஸ்டாலின்” பன்நோக்கு மருத்துவ முகாம்

தென்காசி, அக்.19-

தென்காசி மாவட்டம் மேலநீலிதநல்லூர் வட்டாரம், வடக்கு பனவடலி ஊராட்சி, திருமலாபுரம் அரசு மேல்நிலைப்பள்ளியில் நடைபெற்ற “நலம் காக்கும் ஸ்டாலின்” பன்நோக்கு மருத்துவ முகாமில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ஏ.கே.கமல்கிஷோர், தென்காசி நாடாளுமன்ற உறுப்பினர் மரு.ராணி ஸ்ரீகுமார் அவர்கள், சங்கரன்கோவில் சட்டமன்ற உறுப்பினர் திரு.ஈ.ராஜா அவர்கள் ஆகியோர் கலந்து கொண்டு பார்வையிட்டார்கள்.

பின்னர் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ஏ.கே. கமல்கிஷோர், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்ததாவது,

பொது மக்கள் உடல் பரிசோதனை மேற்கொள்ளும் வகையில் நலம் காக்கும் ஸ்டாலின் உயர் மருத்துவ சேவையினை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தமிழ்நாடு முழுவதும் துவக்கி வைத்துள்ளார்கள். அதனடிப்படையில் இன்றைய தினம் மேலநீலிதநல்லூர் வட்டாரம், வடக்கு பனவடலி ஊராட்சி, திருமலாபுரம் அரசு மேல்நிலைப்பள்ளியில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறையின் சார்பில் நடைபெறும் இம்முகாமில் பொது மருத்துவம், பொது அறுவை சிகிச்சை, எலும்பியல், மகப்பேறு மற்றும் மகளிர் நலம், குழந்தைகள் நலம், இருதயவியல், நரம்பியல், தோல், பல், கண், காது, மூக்கு, தொண்டை, மனநலம், இயன்முறை, நுரையீரல் மற்றும் இந்திய முறை மருத்துவம் ஆகிய அனைத்து வகையிலும் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு, உரிய மருத்துவ ஆலோசனைகள் வழங்கப்படுகிறது.

மேலும், மாற்றுத் திறனாளிகளுக்கான சான்றிதழ், முதல்வரின் விரிவான மருத்துவ காப்பீடு அட்டை போன்ற அனைத்து சேவைகளும் தகுதியுள்ளவர்களுக்கு ஒரே இடத்தில் கிடைக்கும் விதமாக ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது. எனவே, பொது மக்கள் அனைவரும் முகாமிற்கு வருகை தந்து மருத்துவப் பரிசோதனை பெற்றுக் கொள்ளலாம் இம்முகாமில், மாவட்ட சுகாதார அலுவலர் மரு.கோவிந்தன், இணை இயக்குநர்(நலப்பணிகள்) மரு.பிரேமலதா, தொழிலாளர் உதவி ஆணையர் திருமதி அ.சி.கௌரி ஜெனிபர், வட்டார மருத்துவ அலுவலர் வட்டார சுகாதார மேற்பார்வையாளர் செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் திரு.ஏ.எடிசன் மற்றும் மருத்துவ அலுவலர்கள், சுகாதார ஆய்வாளர்கள், மருத்துவ பணியாளர்கள், அரசு அலுவலர்கள், பொதுமக்கள், உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## தென்காசி மாவட்டத்தில் இளம் சாதனையாளர்களுக்கான பிரதம மந்திரியின் கல்வி உதவித்தொகை திட்டத்தின் கீழ்

# கல்வி உதவித்தொகை பெற தேசிய கல்வி உதவித்தொகை இணையதளத்தில் விண்ணப்பிக்கலாம்- மாவட்ட ஆட்சித்தலைவர் ஏ.கே.கமல்கிஷோர் தகவல்

தென்காசி, அக்.19-

இதர பிற்படுத்தப்பட்டோர் (BC/ MBC/ DNC), பொருளாதாரத்தில் பின்தங்கியவர்கள், சீர்மரபினர் ஆகிய பிரிவுகளைச் சேர்ந்த மாணவர்களுக்கு கல்வி உதவித்தொகை வழங்கும் வகையில் பிரதம மந்திரியின் கல்வி உதவித்தொகை திட்டம் PM-YASASVI-Top Class Education in Schools for OBC, EBC & DNT students மத்திய அரசால் செயல்படுத்தப்படவுள்ளது. 2025-26 ஆம் ஆண்டிற்கு தேசிய கல்வி உதவித்தொகைக்கு விண்ணப்பிக்க பட்டியலிடப்பட்ட (Top Class Schools) பள்ளிகளில் பயிலும் தமிழகத்தைச் சார்ந்த மாணவர்களுக்கு இக்கல்வி உதவித்தொகை வழங்கப்பட உள்ளது. இத்திட்டத்திற்கான பெற்றோரது ஆண்டு வருமான வரம்பு ரூ. 2.50 இலட்சம் இத்திட்டத்தின் கீழ் மாணவர்கள் விண்ணப்பிப்பதற்கு கால அவகாசம் நீட்டிக்கப்பட்டுள்ள நாள்: 15.10.2025. கல்வி நிறுவனங்கள் விண்ணப்பத்தினை சரிபாக்க கால அவகாசம் நீட்டிக்கப் பட்டுள்ள நாள்: 31.10.2025. இத்திட்டத்தின் கீழ் கடந்த நிதியாண்டில் பயனடைந்த மாணவ, மாணவியர்கள் தேசிய கல்வி உதவித்தொகை இணையதளத்தில் (https://scholarships.gov.in) (National Schoalrship Portal) Renewal Application என்ற இணைப்பில் (Link) சென்று OTR Number (One Time Registration) பதிவு செய்து 2025-26 ஆம் ஆண்டிற்கான விண்ணப்பித்தினை புதுப்பித்தல் (Renewal) மேற்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

இத்திட்டத்தின் கீழ் நடப்பாண்டில் புதியதாக விண்ணப்பிக்க விரும்பும் 9 மற்றும் 11 ஆம் வகுப்புகளில் பட்டியலிடப்பட்ட பள்ளிகளில் பயிலும் மாணவ/மாணவியர்கள், தேசிய கல்வி உதவித்தொகைத் தளத்தில் தங்களது கைப்பேசி எண் (Mobile Number) மற்றும் ஆதார் விவரங்களை உள்ளீடு செய்தால் OTR Number & Password பதிவுசெய்யப்பட்ட கைப்பேசி எண்ணிற்கு வரப்பெறும். மேற்படி, OTR Number பயன்படுத்தி 2025-26 ஆம் ஆண்டிற்கான கல்வி உதவித்தொகைக்கு உரிய ஆவணங்களை பதிவேற்றம் செய்து புதியது (Fresh Application) விண்ணப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

மேலும், பட்டியலிடப்பட்ட பள்ளிகளின் விவரங்களை அறிந்திட தொடர்புடைய முதன்மை கல்வி அலுவலர்களை தொடர்பு கொள்ளலாம். https://bcmbcmw.tn.gov.in/welfschemes.htm என்ற இணையதளம் மூலம் காணாலாம். கல்வி நிறுவனங்கள் மாணவ/ மாணவியர்கள் விண்ணபத்துள்ள விண்ணப்பங்களை தேசிய கல்வி உதவித்தொகை இணையதளத்தில் பரிசிலித்து அடுத்த நிலையில் மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் அலுவலருக்கு அனுப்புதல் வேண்டும். அவ்வாறு மேற்கொள்ளும்போது தொடர்புடைய பள்ளி தலைமை ஆசிரியர் Login Credential சரியாக உள்ளதா என்பதை உறுதி செய்தல் வேண்டும்.

இத்திட்டம் தொடர்பான கூடுதல் விபரங்கள் அறிந்திட தேசிய கல்வி உதவித்தொகை (NSP) (https://scholarships.gov.in) இணையதளத்தில் அறியலாம் என மாவட்ட ஆட்சித்தலைவர் ஏ.கே.கமல்கிஷோர் தெரிவித்துள்ளார்.

# தூய்மை பாரத இயக்கம் 2.0 திட்டத்தின் கீழ் மாட்டுத்தாவணி எம்.ஜி.ஆர்,பேருந்து நிலையத்தில் புதிய நவீன இலவச கழிப்பறைகள் பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டது

மதுரை, அக்.19-

மதுரை மாநகராட்சி மாட்டுத்தாவணி எம்.ஜி.ஆர். பேருந்து நிலையத்தில் தூய்மை பாரத இயக்கம் 2.0 திட்டத்தின் கீழ் ரூ.1.58 கோடி மதிப்பீட்டில் புதிய நவீன இலவச கழிப்பறைகள் கட்டப்பட்டு வருகிறது. அதில் ரூ.31.60 லட்சம் மதிப்பீட்டில் கட்டி முடிக்கப்பட்ட ஆண்கள் நவீன கழிப்பறையை பொதுமக்கள் பயன்பாட்டிற்கு ஆணையாளர் திருமதி.சித்ரா விஜயன், திறந்து வைத்தார்கள்.



மதுரை மாநகராட்சி மாட்டுத்தாவணி எம்.ஜி. ஆர்.பேருந்து நிலையம் பகுதிகள் மற்றும் அருகில் உள்ள மாட்டுத்தாவணி ஆம்னி பேருந்து நிலையத்தில் தூய்மை பாரத இயக்கம் 2.0 திட்டத்தின் கீழ் ரூ.1.58 கோடி மதிப்பீட்டில் இலவச நவீன 5 ஆண்கள், 5 பெண்கள் கழிப்பறைகள் கட்டும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதில் ஒவ்வொரு கழிப்பறைகளிலும் 9 சிறுநீர் பிறைகள். 2 வெஸ்டன் கழிப்பறைகள் (மாற்றுத் திறனாளி மற்றும் முதியவர்கள்) 4 இந்தியன் டைப் கழிப்பறைகள், 2 வாஸ்பேஷ்கள், மின்விளக்கு வசதி மற்றும் தண்ணீர் வசதியுடன் முற்றிலும் நவீன அடிப்படையில் அமைக்கப்பட்டுள்ளது. தீபாவளி பண்டிகையை முன்னிட்டு முதற்கட்டமாக மாட்டுத்தாவணி எம்.ஜி.ஆர். பேருந்து நிலையத்தில் ரூ.31.60 லட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 9 சிறுநீர் பிறைகள் மற்றும் 5 நவீன ஆண்கள் கழிப்பறைகள் பொதுமக்கள் பயன்பாட்டிற்கு இன்று திறந்து வைக்கப் பட்டு ள்ளது. பிற கழிப்பறைகளில் கட்டுமான பணிகள் விரைந்து மேற்கொள்ளப்பட்டு பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்படும்.

இந்நிகழ்வில் தலைமை பொறியாளர் திரு.பாபு, துணை ஆணையாளர் .சித்ரா, செயற்பொ றியாளர் சுப்பிரமணி, உதவி நகர்நல அலுவலர் மரு.அபிஷேக், உதவி செயற் பொறியாளர் காமராஜ், உதவிப் பொறியாளர் ஜெயா, சுகாதார அலுவலர் ராஜ் கண்ணன், மாமன்ற உறுப்பினர் மாலதி மாநகராட்சி அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

மாலை தந்தி

ஞாயிற்றுக்கிழமை 19.10.2025



# நாகர்கோவில் ஸ்காட் கிறிஸ்தவ மேல்நிலைப்பள்ளி வளாகத்தில் நடைபெற்ற நலம் காக்கும் ஸ்டாலின் முழுஉடல் பரிசோதனை முகாம்

கன்னியாகுமரி, அக் .19-

கன்னியாகுமரி மாவட்டம் நாகர்கோவில் ஸ்காட் கிறிஸ்தவ மேல்நிலை ப்பள்ளி வளாகத்தில் நடைபெற்ற நலம் காக்கும் ஸ்டாலின் - முழு உடல் பரிசோதனை முகாமினை மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.ஆர்.அழகுமீனா, இ.ஆ.ப, அவர்கள் குத்துவிளக்கேற்றி துவக்கி வைத்து, பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு தெரிவிக்கையில்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தமிழ்நாட்டு மக்களுக்கு உயர்தரமான மருத்துவ சிகிச்சையினை வழக்க வேண்டும் என்ற நோக்கத்தில் மக்களை தேடி மருத்துவம், நம்மைக் காக்கும் 48, தொழிலாளர்களை தேடி மருத்துவ திட்டம், பாதம் காப்போம் திட்டம், இதயம் காப்போம் திட்டம் உள்ளிட்ட பல்வேறு திட்டங்களை அறிவித்து சிறப்பாக செயல்படுத்தி வருகிறார்கள். அதன் தொடர்ச்சியாக பொதுமக்களுக்கு தரமான மருத்துவ சிகிச்சையினை அவர்கள் இருக்கும் இடத்திற்கே சென்று வழங்கிட வேண்டும் என்ற நோக்கத்தில் நலம் காக்கும் ஸ்டாலின் என்ற திட்டம் அறிவிக்கப்பட்டு, பொதுமக்களுக்கு நலம் காக்கும் ஸ்டாலின் முழு உடல் பரிசோதனை மருத்துவ முகாம்கள் வாரம் தோறும் சனிக்கிழமைகளில் நடத்தப்பட்டு வருகின்றது.

இம்முகாமில் 17 உயர் சிறப்பு மருத்துவ பிரிவுகளை சார்ந்த மருத்துவர்களை கொண்டு மருத்துவ சேவைகள் வழங்கப்படுகின்றது. மேலும் பொதுமக்களுக்கு முதலமைச்சரின் விரிவான மருத்துவ வழங்குவதற்கும். மாற்றுத்திறனாளிகளுக்கு மாற்றுத்திறனாளிகளுக்கான அடையாள அட்டை வழங்குவதற்கும் மற்றும் தொழிலாளர்களுக்கு காப்பீடு அட்டை அமைப்புசாரா தொழிலாளர்களுக்கான அடையாள அட்டை வழங்குவதற்கும் சம்பந்தப்பட்ட துறை வாயிலாக ஏற்பாடு செய்யப்பட்டு வழங்கப்பட்டு வருகிறது.

அதனடிப்படையில் நமது மாவட்டத்தில் முதற்கட்டமாக 10 முகாம்கள் நடைபெற்றுள்ளது. அதில் 5430 ஆண்களும், 12814 பெண்களும் என மொத்தம் 18244 பயனாளிகள் பயன்பெற்றுள்ளார்கள். அதனைத்தொடர்ந்து இரண்டாம் கட்டமாக இன்று நாகர்கோவில் மாநகராட்சிக்குட்பட்ட கட்டையன் விளை, கேசவதிருப்ப புரம், பள்ளிவிளை, வாத்தியார்விளை, கிருஷ்ணன்கோவில், சி.பி.எச் ரோடு, மேல கலுங்கடி, வடசேரி, கணியான் குளம், அருந்தியார் தெரு, காமராஜபுரம், புதுக்குடியிருப்பு, கிறிஸ்து நகர், வாட்டர் டாங்ரோடு, கோர்டு ரோடு உள்ளிட்ட வார்டுகளுக்குட்பட்ட பொதுமக்கள் பயன்பெறும் வகையில் நாகர்கோவில் ஸ்காட் கிறிஸ்தவ மேல்நிலைப்பள்ளி வளாகத்தில் நடைபெற்று கொண்டிருக்கிறது.

மேலும் முகாமிற்கு வருகை தரும் பொதுமக்கள் எந்த விதமான சிகிச்சை பெற வந்திருக்கிறார்கள் என்று மருத்துவ பயனாளர்களை நேரில் சந்தித்து கேட்டறியப்பட்டது. முகாமிற்கு வரும் மருத்துவ பயனாளர்கள் விவரங்களை பதிவேடுகளில் பதிவு செய்கிறதை நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. மேலும் முகாமில் அமைக்கப்பட்டுள்ள மருந்தகம், குழந்தைகள் நலப்பிரிவு, மனநலப்பிரிவு உள்ளிட்டவைகளை நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. தொடர்ந்து மாற்றுத்திறனாளிகள் நலத்துறை சார்பில் மாற்றுத்திறனாளி அடையாள அட்டை வழங்கப்பட்டது. இவ்வாறு மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ஆர்.அழகுமீனா, இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்கள்.

நடைபெற்ற ஆய்வில் இணை இயக்குநர் மருத்துவப்பணிகள் மரு.சகாய ஸ்டிபன் ராஜ், மாவட்ட சுகாதார அலுவலர் மரு.அரவிந்த் ஜோதி, துணை இயக்குநர் மரு.ரவிக்குமார் (குடும்ப நலம்), மரு.கிரிஜா (தொழுநோய்), மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் திரு.தினேஷ் சந்திரன், நாகர்கோவில் மாநகராட்சி துணை மேயர் திருமதி.மேரிபிரின்சி லதா, மாநகர் நகர் நல அலுவலர் மரு.ஆல்பர் மதியரசு, ஆசாரிப்பள்ளம் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை கண்காணிப்பாளர் மரு.கிங்ஸ்லின், ஸ்காட் கிறிஸ்தவ மேல்நிலைப்பள்ளி தலைமையாசிரியர் திரு.பிரேம் ராஜ், துறை அலுவலர்கள், மருத்துவர்கள், செவிலியர்கள், பொதுமக்கள் உட்பட பலர் கலந்துகொண்டார்கள்.

# முதலமைச்சரின் தாயுமானவர் திட்டத்தின் கீழ் மாதந்தோறும் ரேசன் பொருட்களை வீடு தேடி வழங்கிவரும் தமிழ்நாடு முதலமைச்சர் தலைமையிலான தமிழ்நாடு அரசுக்கு மாற்றுத்திறனாளிகள் மற்றும் வயது முதிர்ந்தோர் நன்றி தெரிவித்துள்ளனர்





தமிழ்நாட்டில் உள்ள வயது முதிர்ந்தோர் மற்றும் மாற்றுத்திறனாளி குடும்ப அட்டைதாரர்களின் இல்லத்திற்கே நேரடியாக சென்று அரிசி, சர்க்கரை உள்ளிட்ட ரேசன் பொருட்களை விநியோகம் செய்யும் "முதலமைச்சரின் தாயுமானவர்" என்ற சிறப்பான திட்டத்தை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பயனாளிகளுக்கு ரேசன் பொருட்களை வழங்கி தொடங்கி வைத்துள்ளார்கள்.

வயது முதிர் ந்தோர் மற்றும் மாற்றுத் திறனாளிகள் குடிமைப் பொருட்களை பெற்று எடுத்துச் செல்வதில் மிகுந்த சிரமத்திற்கு ஆளாகின்றனர் என்பதை அறிந்து அவர்களின் வீட்டிற்கே சென்று குடிமைப் பொருட்களை வழங்கும் முதலமைச்சரின் தாயுமானவர் திட்டம் தொடங்கப்பட்டுள்ளது.

மதுரை மாவட்டத்தில் 1389 நியாய விலை கடைகள் இருக்கிறது. இதில் 70,311 நபர்கள் மாற்றுத்திறனாளிகள் மற்றும் 70 வயதிற்கு மேற்பட்டோர் உள்ளனர். நியாய விலை கடைகளை 725 குழுக்களாக பிரிக்கப்பட்டுள்ளது. இக்குழுக்களில் உள்ள முதன்மை நியாய விலை கடைகளை தேர்வு ஒரு நியாய விலை கடைக்கு அதிகபட்சமாக 60 குடும்ப அட்டைகள் வீதம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. ஒவ்வொரு மாதமும் இரண்டாவது சனி மற்றும் ஞாயிற்று கிழமைகளில் "முதலமைச்சரின் தாயுமானவர்" திட்டதின் கீழ் பயன்பெறும் 70 வயதிற்கு மேற்பட்டோர் மற்றும் மாற்றுத்திறனாளிகள் இல்லங்களுக்கு நேரடியாக சென்று நியாய விலை கடை அலுவலர்கள் அவர்களின் முன்னிலையில் மின்னனு தராசின் மூலம் எடையிட்டு குடிமைப் பொருட்களை வழங்கி வருகிறார்கள்.

இத்திட்டத்தின் கீழ் பயனடைந்த ஜெயப்பிரியா அவர்கள் தெரிவிக்கையில்:

நடக்கமுடியாமல் படுத்த நிலையில் இருக்கும் மாற்றுத்திறனாளியான எனக்கு எனது தந்தை தான் இதுநாள் வரை ரேஷன் கடைக்கு சென்று பொருட்களை வாங்கி வந்தார். தற்போது தாயுமானவர் திட்டம் அமலான பிறகு ரேஷன்கடை ஊழியர் வீட்டிற்கே வந்து பயோமெட்ரிக் இயந்திரத்தில் கைரேகை பதிவு செய்து அரிசி, பருப்பு, பாமாயில், சீனி உள்ளிட்ட பொருட்களை வழங்கி வருகிறார். முன்னர் ரேஷன் கடைகளில் அனைத்து பொருட்களையும் ஒரே நாளில் வாங்க முடியாது. வெவ்வேறு நாட்களுக்கு சென்று வாங்கும் நிலை இருந்தது. தற்போது தமிழ்நாடு முதலைமைச்சர் அவர்களின் கருணையான நடவடிக்கையால் எங்கள் குடும்பத்திற்கு தேவையான ரேஷன்பொருட்கள் எங்களது வீடு தேடி வருகிறது. எங்களைப் போன்றவர்களை மட்டுமின்றி. மூத்த குடிமக்களின் நலனையும் கருத்தில் கொண்டு மாண்புமிகு தமிழ்நாடு முதலைமைச்சர் அவர்கள் இத்திட்டத்தில் சேர்த்தது, மூத்த குடிமக்களுக்கு வரப்பிரசாதமாக அமைந்துள்ளது. இதனால் எங்கள் சிரமம் குறைந்துள்ளது. ரேஷன் கடைக்கு அலைச்சல் இன்றி வீட்டில் இருந்தபடியே வயி றார சாப்பிட முடிகிறது. எங்களை மதித்து இப்படிப் பட்ட உன்னதமான திட்டத்தை தந்த முதல்வருக்கு எங்களது நெஞ்சம் நிறைந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன் என தெரிவித்தார்.

வெளியீடு செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், மதுரை.

# பொதுமக்கள் சாலையில் மனநலம் பாதிக்கப்பட்டவர்களை காணும் போது ஆசாரிப்பள்ளம் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை வளாகத்தில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள மனநல அவசர சிகிச்சை மற்றும் மீட்பு மையத்தில் சேர்க்க முன் வரவேண்டும்




கன்னியாகுமரி, அக்.19-

கன்னியாகுமரி மாவட்டம் ஆசாரிப்பள்ளம் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை வளாகத்தில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள மனநல அவசர சிகிச்சை மற்றும் மீட்பு மையத்தினை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி. ஆர்.அழகுமீனா திறந்து வைத்து பேசுகையில் தேசிய நலவாழ்வு இயக்கம் மற்றும் கன்னி யாகுமரி மாவட சுகாதாரத் துறை ஆகியவற்றின் ஆதரவுடன் தி பனியன் அமைப்பானது, பால்ம் மனநல அங்கமான மனோலயா ஆகியவற்றுடன் இணைந்து, 30 படுக்கைகள் கொண்ட புதிய மனநல அவசரசிகிட்சை மற்றும் மீட்பு மையம் திறக்கப்பட்டுள்ளது.

மனநோய் என்பது குணப்படுத்தக்கூடிய நோயாகும். முதலில் குடும்பத்தில் உள்ளவர்கள் தான் தங்கள் பிள்ளைகள் மன அழுத்தத்திற்கு உள்ளாகி உள்ளார்களா எனவும் நடைமுறையில் மாற்றம் உள்ளதா என கண்டறிய வேண்டும். சின்ன குழந்தைகள் முதல் 90 வயது வரை உள்ள பெரியவர்கள் வரை மன அழுத்தத்திற்கு உள்ளாகி பாதிக்கப்படுகிறார்கள். ஒரு குடும்பத்தில் காய்ச்சல் உள்ளவர்களை நாம் எப்படி மருத்துவமனைக்கு அழைத்துச் செல்வோமோ அதேப்போன்று குடும்பத்தில் ஒருவர் மன அழுத்தத்திற்கு உள்ளாகும் போது உடனடியாக மனநல மருத்துவரிடம் இரண்டு மூன்று முறை அழைத்து சென்று கவுன் சிலிங் கொடுத்தாலே பிரச்சனையை சரி செய்ய முடியும். எல்லா நோய்களையும் போன்று இதுவும் ஒரு நோய்தான். சாலையோரம் மனநலம் பாதிக்கப்பட்ட பெண்கள் அவர்களுக்கே தெரியாமல் தவறாக பயன்படுத்தப்பட்டு, அதன் மூலம் கர்ப்பமாகி குழந்தைகள் பெறுகிறார்கள். அவர்களின் குழந்தைகளை அரசு மருத்துவர்கள் காப்பகங்களில் சேர்த்து விடுவார்கள். நீங்கள் இதனை சாதாரணமாக எடுத்துக் கொள்ளாதீர்கள். பொதுமக்கள் சாலையில் செல்லும்போது இந்த மாதிரியான நபர்களை காணும் போது அருகில் உள்ள ஆசாரிப்பள்ளம் அரசு மருத்துவமனையில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள அவசரசிகிட்சை மற்றும் மீட்பு மையத்தில் சேர்க்க முன்வர வேண்டும்.

தமிழ்நாட்டில் அனைத்து மாவட்டங்களிலும் மனநல அவசரசிகிட்சை மற்றும் மீட்பு மையங்கள் அமைக்கப்பட்டு வருகிறது. நமது மாவட்டத்தில் ஒரு மாதத்தில் வாகன விபத்துக்கள் மூலம் 20 முதல் 24 நபர்கள் வரை மரணம் அடைகிறார்கள். விபத்தின் மூலம் தலையில் அடிப்பட்டு, மன நோயாளியாக மாறுகின்றார்கள். இரண்டாவது காரணம் போதைப்பொருளுக்கு அடிமையாகி அதன் வாயிலாகவும் இந்த மாதிரியான பாதிப்பிற்கு உள்ளாகிறார்கள். இதற்காக தான் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் போதை இல்லா தமிழ்நாடு என்ற திட்டத்தினை அறிமுகப்படுத்தி சிறப்பாக செயல்படுத்தி வருகிறார்கள். அதனடிப்படையில் நமது மாவட்டத்திற்குட்பட்ட பள்ளி கல்லூரி மாணவ மாணவியர்களை போதை விழிப்புணர்வு குழுவினர் சந்தித்து அவர்களுக்கு தேவையான மனநல ஆலோசனைகள் மற்றும் விழிப்புணர்வுகளை ஏற்படுத்தி வருகிறார்கள்.

மேலும் மனநலம் பாதிக்கப்பட்டு வீடற்ற நபர்களுக்கு மருத்துவமனை அடிப்படையிலான, பலதரப்பட்ட சேவைகளை வழங்குவதே அவசர சிகிட்சை மற்றும் மீட்பு மையத்தின் நோக்கமாகும். இந்த மையங்கள் பாதிக்கப்பட்டவர்களை மீட்டெடுத்து, அவர்களுக்கு மறுவாழ்வு அளித்து, மீண்டும் தங்கள் குடும்பங்களில் சேர்ந்து, சமூகத்தில் மீண்டும் ஒருங்கிணைக்க தேவையான உதவிகளையும் வழங்கும். இவ்வாறு மாவட்ட ஆட்சித்தலைவர் ஆர்.அழகுமீனா, பேசினார்கள்.

# அமைச்சர் கேஆர்.பெரியகருப்பன் சிங்கம்புணரி வட்டத்திற்குட்பட்ட பகுதியில் நடைபெற்ற "நலம் காக்கும் ஸ்டாலின்" திட்ட சிறப்பு மருத்துவ முகாமினை பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு, கர்ப்பிணி தாய்மார்களுக்கு ஊட்டச்சத்து பெட்டகங்கள், மாற்றுத்திறனாளிகளுக்கு அடையாள அட்டைகள் மற்றும் பல்வேறு வகையான உதவி உபகரணங்களை வழங்கினார்



சிவகங்கை, அக்.19-

மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு.கேஆர். பெரியகருப்பன் அவர்கள், சிங்கம்புணரி வட்டத்திற்குட்பட்ட குளோபல் இண்டர்நேஷனல் பள்ளியில், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறையின் சார்பில் நடைபெற்ற "நலம் காக்கும் ஸ்டாலின்" திட்ட சிறப்பு மருத்துவ முகாமினை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி கா.பொற்கொடி தலைமையில் பார்வையிட்டு, ஆய்வு மேற்கொண்டு தெரிவிக்கையில்,

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அனைத்து தரப்பு மக்களும் பயன்பெறுகின்ற வகையில், பல்வேறு மகத்தான திட்டங்களை செயல்படுத்தி தமிழகத்தினை வளர்ச்சி பாதையில் வழிநடத்திச் சென்று கொண்டிருக்கிறார்கள். அதனடிப்படையில், அரசின் அனைத்து துறைகளும் சீரான வளர்ச்சியும் பெற்று வருகிறது.

அந்தவகையில், நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம் என்ற சொல்லிற்கிணங்க, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் சீரிய சிந்தனையில் உதித்த திட்டமாக நலம் காக்கும் ஸ்டாலின் திட்டம் திகழ்ந்து வருகிறது. மேலும், வரும்முன் காப்போம் என்ற நோக்கில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வு துறையின் சார்பில் பொதுமக்களின் உடல்நலத்தினை பேணிக் காத்திடும் பொருட்டு, பல்வேறு திட்டங்களும் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் கடந்த 2.8.2025 அன்று நலம் காக்கும் ஸ்டாலின் சிறப்பு மருத்துவ முகாமானது தமிழகம் முழுவதும் தொடங்கி வைக்கப் பட்டது. அதனைத்தொடர்ந்து, சிவகங்கை மாவட்டத்தில் 39 முகாம்கள் நடத்திட திட்டமிடப்பட்டு, பிரதிவாரம் சனிக்கிழமை தோறும் மாவட்டத்தின் குறிப்பிட்ட பகுதியில் இம்முகாமானது சிறப்பாக நடைபெற்று 10 முகாம்கள் சிறப்பாக நிறைவுபெற்று, தற்போது 11 வது முகாமானது சிங்கம்புணரி வட்டத்திற்குட்ட பகுதியில் சிறப்பாக நடைபெற்று வருகிறது. மேலும், தமிழகம் முழுவதும் நடைபெறும் இம்முகாம்களில் சிறந்த 10 மாவட்டங்களில் ஒன்றாக சிவகங்கை விளங்கி வருவது பெருமைக்குரிய ஒன்றாகும்.

வருமுன் காப்போம் என்ற அடிப்படையில், அவ்வப்போது மருத்துவ பரிசோதனைகள் மேற்கொண்டு தங்களின் உடல்நலத்தினை சரிவர கண்காணித்து பாதுகாப்பது அவசியம் என்பதை கருத்தில் கொண்டு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான தமிழக அரசின் இத்திட்டமானது சிறப்பாக செயல்படுத்தப்பட்டு, இச்சிறப்பு மருத்துவ முகாம்களின் மூலம் 15 க்கும் மேற்பட்ட சிறப்பு மருத்துவர்களைக் கொண்டு, பல்வேறு மருத்துவ பரிசோதனைகளை பொதுமக்கள் பெறுவதற்கான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் நல்லாட்சியில் பொதுமக்களின் உடல்நலத்தினை பாதுகாப்பது மட்டுமன்றி, முதியோர்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகள் பயன்பெறுகின்ற வகையில் தாயுமானவர் திட்டமும், மக்களின் தேவைகளை நிறைவேற்றுகின்ற வகையில் உங்களுடன் ஸ்டாலின் போன்ற திட்டங்களும் அறிவிக்கப்பட்டு, சிறப்பாக செயல்பட்டு வருகிறது.

குறிப்பாக, சிவகங்கை மாவட்டத்தில் சுமார் 215 உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாம்கள் நடத்திட திட்டமிடப்பட்டு, மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலும் சிறந்த முறையில் 215 முகாம்கள் நடத்தப்பட்டு, நிறைவு பெற்றுள்ளது. அம்முகாம்களில் மனு அளிக்கப்பட்ட தகுதியுடைய மனுக்கள் மீது, உடன் தீர்வு காணப்பட்டு அம்முகாம் களிலேயே உரிய பயன்களும் வழங்கப்பட்டுள்ளது. மீதமுள்ள மனுக்கள் பரிசீலனைக்குட்படுத்தப்பட்டு, மனு அளிக்கப்பட்ட 45 நாட்களுக்குள் தீர்வு காணப்படுவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு, அதற்குரிய பயன்களும் வழங்கப்படும்.

மேலும், வரும்முன் காப்போம் என்ற அடிப்படையில் கடந்த வாரம் 5 வயதிற்குட்பட்ட குழந்தைகளுக்கு போலியோ சொட்டு மருந்து வழங்கும் முகாமும் நமது மாவட்டத்தில் நடைபெற்றது.

இவ்வாறாக மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறையின் சார்பில் மேற்கொள்ளப்பட்டு வரும் நடவடிக்கைகளின் அடிப்படையில், உலக தரத்திற்கு இணையான மருத்துவ சேவைகளை வழங்கி வரும் மாநிலமாக தமிழகம் திகழ்ந்து வருகிறது. தனியார் மருத்துவமனைகளுக்கு இணையாக அனைத்து மருத்துவ கட்டமைப்புக்களும், மருத்துவ உபகரணங்களும், தரமான சிகிச்சைகளும், அரசு மருத்துவமனைகள், அரசு ஆரம்ப சுகாதார நிலையங்கள், துணை சுகாதார நிலையங்கள் ஆகியவைகளில் வழங்கப்பட்டு, பொதுமக்களின் நலன் காக்கப்பட்டு வருகிறது. குறிப்பாக, பல்வேறு மேலைநாடுகளிலிருந்து தமிழகத்திற்கு வருகை புரிந்து, தரமான மருத்துவ சிகிச்சை பெற்று நலமுடன் தங்களது நாட்டிற்கு திரும்புகின்றனர்.

நோயற்ற ஆரோக்கியமான சமுதாயத்தை உருவாக்கிட வேண்டும் என்ற தத்துவத்தின் அடிப்படையில், அனைத்து தரப்பு மக்களும் பயன்பெறுகின்ற வகையிலான திட்டங்கள் தமிழகத்தில் செயல்படுத்தப்பட்டு, பொதுமக்களின் நலன் காக்கின்ற அரசாக தமிழக அரசு திகழ்ந்து வருகிறது என மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு.கேஆர். பெரியகருப்பன் அவர்கள் தெரிவித்தார்.

இம்முகாமில், 12 கர்ப்பிணி தாய்மார்களுக்கு ஊட்டச்சத்து பெட்டகங்கள் மற்றும் 60 மாற்றுத்திறனாளிகளுக்கு அடையாள அட்டைகள், 3 மாற்றுத்திறனாளிகளுக்கு தலா ரூபாய் 15,250/ வீதம் மடக்கு சக்கர நாற்காலிகள், 7 மாற்றுத்திறனாளிகளுக்கு தலா ரூபாய் 3,285/ வீதம் காதொலி கருவிகள் என நலத்திட்ட உதவிகளை மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு.கேஆர்.பெரியகருப்பன் அவர்கள் பயனாளிகளுக்கு வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில், சிவகங்கை அரசு மருத்துவமனை மருத்துவ கல்லூரி முதல்வர் மரு.சீனிவாசன், இணை இயக்குநர் (மருத்துவப்பணிகள்) (பொ) மரு.அருள்தாஸ், மாவட்ட சுகாதார அலுவலர் மரு.எஸ்.மீனாட்சி, சிங்கம்புணரி பேரூராட்சி தலைவர் திரு.அம்பலமுத்து, பேரூராட்சி துணை தலைவர் திரு.செந்தில் குமார், வட்டார மருத்துவ அலுவலர் மரு.நபிஷா பானு, சிங்கம்புணரி வட்டாட்சியர் திரு.நாகநாதன் மற்றும் மருத்துவத்துறையை சார்ந்த அலுவலர்கள், ஏராளமான பொதுமக்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



■ மதுரை மாவட்டம் திருமங்கலம் ஊராட்சி ஒன்றியத்திற்கு உட்பட்ட ஆலம்பட்டி ஊராட்சி சமுதாயக்கூடத்தில் 38 ஊராட்சிகளை சேர்ந்த தூய்மை காவலர்கள் மற்றும் ஊக்குவிப்பாளர்கள் உட்பட 216 பேருக்கு டி வி பி பில்டர்ஸ் நிறுவனம் சுப.துரைப்பாண்டியன் பெரியநாச்சி சார்பாக தீபாவளி புத்தாடைகள் வழங்கப்பட்டது. வட்டார வளர்ச்சி அலுவலர் சந்திரகலா தலைமை வகித்தார் மண்டல துணை வட்டார வளர்ச்சி அலுவலர் மகேஸ்வரன் முன்னிலை வகித்தார். நல்லோர் குழு அமைப்பினர் ஒருங்கிணைத்தனர். மேலும் எஸ் வி எஸ் கடலை மாவு நிறுவனத்தின் சார்பாக மாவு வகைகள் அடங்கிய பரிசு பை வழங்கப்பட்டது. இந்நிகழ்வில் கலந்து கொண்டோருக்கு நட்சத்திர நண்பர்கள் அறக்கட்டளை ஸ்டார் குருசாமி சார்பாக மதிய உணவு வழங்கப்பட்டது. ஒரு கிராமத்தின் தூய்மை அந்த நாட்டின் தூய்மை என்ற அடிப்படையில் வீட்டையும் நாட்டையும் தூய்மையாக வைத்துக் கொள்வோம் தீபாவளியை பாதுகாப்பான முறையில் கொண்டாடுவோம் என்ற உறுதிமொழி எடுத்துக்கொள்ளப்பட்டது. இந்நிகழ்வில் ஊராட்சி செயலாளர்கள் தூய்மை பாரத திட்டம் வட்டார ஒருங்கிணைப்பாளர் செல்வி உட்பட பலர் கலந்து கொண்டனர்







■ மக்கள் நல்வாழ்வு சமூக பாதுகாப்பு அமைப்பின் சார்பில் காந்தி ஜெயந்தி முன்னிட்டு நிறுவனத் தலைவர் ராஜேஷ் ஆலோசனையின் படி திருச்சி மாவட்டம் திருவெறும்பூர் தாலுகா BHEL மெட்ரிகுலேஷன் பள்ளி குழந்தைகளுக்கு சில போட்டிகள் நடத்தி விருதுகள் வழங்கப்பட்டன இதில் தலைமையாசிரியர் சேஷாத்ரி கோபால் அமைப்பின் பொதுச் செயலாளர் ஆதிலெட்சுமி ஆனந்தராஜ் மாநில ஆலோசகர் ராமன் மாநில துணை ஆலோசகர் தமிழழகன் வழக்கறிஞர் சாருமதி மாநில மகளிர் அணி துணை ஆலோசகர் ஈஸ்வரி மாநில பொருளாளர் பானுமதி மாநில மகளிர் அணி தலைவர் காந்திமதி மாநில இளைஞரணி தலைவர் ஜான் மாநில மகளிர் அணி துணைத் தலைவர் ஜெயராணி மாநில மகளிர் அணி செயலாளர் திலகவதி மாநில மகளிர் அணி துணைச் செயலாளர் ரேவதி மாநில ஒருங்கிணைப்பாளர் ராமன் மாநிலம் மகளிர் அணி துணை ஒருங்கிணைப்பாளர் ராஜேஸ்வரி திருச்சி மாவட்ட பொருளாளர் கிருஷ்டி திருச்சி மாவட்ட தலைவர் மல்லேஸ்வரி திருச்சி மாவட்ட இளைஞர் அணி செயலாளர் சரவணன் திருச்சி மாவட்டம் மகளிர் அணி துணைச் செயலாளர் யாஸ்மின் மற்றும் மாரியம்மாள் கலந்துகொண்டு விழாவினை சிறப்பித்தனர்..







## வேலூர், (ரெட் கிராஸ்) செஞ்சிலுவை முதியோர் இல்லத்தில் மூத்த குடிமக்களுக்கு, புத்தாடை மற்றும் இனிப்புகள் வழங்கி உடன் பட்டாசுகள் வெடித்து மகிழ்ச்சி கொண்டாட்டம்

வேலூர், அக்.19-

வேலூர் மாவட்டம், அணைக்கட்டு தாலுகா, பொய்கை ஊராட்சியில் உள்ள (ரெட் கிராஸ்) செஞ்சிலுவை சங்கத்தின் முதியோர் இல்லத்தில் தங்கியுள்ள மூத்த குடிமக்களை சந்தித்து தீபாவளி வாழ்த்துக்களை தெரிவித்து, புத்தாடை மற்றும் இனிப்புகளை வங்கி வழங்கி அவர்களுடன் மத்தாப்பு, பூந்தொட்டி, சங்கு சக்கரம், சுரசுரா ஆகிய பட்டாசுகள் வெடித்து மகிழ்ச்சியை வெளிப்படுத்தினர். இந்நிகழ்வின் போது வேலூர் வருவாய் கோட்டாட்சியர் செந்தில்குமார், வேலூர் மாவட்ட செஞ்சிலுவை சங்கத்தின் தலைவர் உதயசங்கர், செயலாளர் பர்வதா, பொருளாளர் பாண்டியன், வேலூர் மாவட்ட செஞ்சிலுவை சங்க பொதுக்குழு உறுப்பினரும், பாரத் எஜுகேஷனல் கல்வி குழுமம், பாரத் மெட்ரிக் பள்ளி மற்றும் பாரத் பி.எட். கல்லூரி குழும தலைவருமான டாக்டர். இந்திரநாத், ரெட் கிராஸ் முதியோர் இல்ல அலுவலர்கள், பணியாளர்கள் உட்பட பலர் உடனிருந்தனர்.




## காட்பாடி தாலுகா அலுவலகம் எதிரே ஜாக்டோ ஜியோ சார்பில் மாபெரும் ஆர்ப்பாட்டம்

வேலூர், அக்.19-

வேலூர் மாவட்டம், காட்பாடி தாலுகா அலுவலகம் எதிரில் ஜாக்டோ ஜியோ சங்கத்தின் சார்பில், பழைய ஓய் வூதிய திட்டத்தை வழங்க மற்றும் பல்வேறு அம்ச கோரிக்கைகளை வலியுறுத்தி ஜனார்தனன் தலை மையில் மாபெரும் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இக்கூட் டத்தில் மாவட்ட செயலாளர் கே. தனசேகர், ஜி.டி.பாபு, திருக்குமரன் மற்றும் நிர்வாகிகள், உறுப்பினர்கள் உட்பட பலர் கலந்து கொண்டு பேனரை கையில் ஏந்தி பல்வேறு அம்ச கோரிக்கைக ளை வலியுறுத்தி, கோஷங்களை எழுப்பி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

## பட்டாசு காயங்களுக்கு சிறப்பு முகாம்: வாசன் கண் மருத்துவமனை புதிய அறிவிப்பு

கோவை, அக்.19-

15 வயதிற்குக் குறைவான குழந்தைகளுக்கான இலவச கண் பரிசோதனை முகாமை வாஸன் கண் மருத்துவமனை அறிமுகப் படுத்தி இருக்கிறது.

அக்டோபர் 15 முதல் 24, 2025 வரை பட்டாசு காயங்களுக்கு சிறப்பு முகாம்"

15 வயதிற்குக் குறைவான குழந்தைகளுக்கான பட்டாசு தொடர்பான கண் காயங்களுக்கு இலவச கண் பரிசோதனை வழங்கும் சிறப்பு சமூக நல முயற்சியை வாசன் கண் மருத்துவமனை அறிவித்துள்ளது. இந்த முகாம் அக்டோபர் 15 முதல் 24 2025 வரை அனைத்து வாசன் கண் மருத்துவமனை மையங்களிலும் நடைபெறும்.

"பட்டாசு காயங்களால் பாதிக்கப்பட்ட குழந்தைகளில் நிரந்தர பார்வை இழப்பைத் தடுக்க உடனடி மருத்துவ சிகிச்சை அவசியம். இத்தகைய அவசர நிலைகளை கையாள எங்கள் அனுபவமிக்க நிபுணர் குழு முழுமையாக தயாராக உள்ளது."என்று வாசன் கண் மருத்துவமனையின் கண் மருத்துவ நிபுணர்கள் தெரிவித்தனர்.

திருவிழா காலத்தில் பெற்றோர்கள் மற்றும் பொதுமக்கள் பாதுகாப்பாகவும் பொறுப்புடன் கொண்டாடவும், மேலும் கண் எரிச்சல் அல்லது காயம் ஏற்பட்டால் தாமதமின்றி நிபுணர் ஆலோசனை பெறவும் வாசன் கண் மருத்துவமனை கேட்டுக்கொண்டுள்ளது.

இந்த முயற்சி, சமூக கண் நலம், அவசர சிகிச்சை மற்றும் தடுப்பு விழிப்புணர்வில் வாசன் கண் மருத்துவமனையின் அர்ப்பணிப்பை வலியுறுத்துகிறது.

மேலும் தகவல்கள் அல்லது உதவிக்காக, உங்களுக்குச் சமீபத்தில் உள்ள வாசன் கண் மருத்துவமனை மையத்தை அணுகவும் அல்லது 1800 571 3333 என்ற எண்ணில் உடனடியாக தொடர்பு கொள்ளவும்.






■ சிவகங்கை மாவட்டம் தேவகோட்டை வட்டம் தேவகோட்டையில் தனியார் மருத்துவமனை வைத்துள்ள மருத்துவர் ஏழுமலை மற்றும் அவரது மகன் மருத்துவராக நீண்ட காலமாக தனியார் மருத்துவமனையை நிர்வகித்து வருகின்றனர். இந்நிலையில் ஜனவரி மாதம் ஒரு பெண் தவறான சிகிச்சை மூலம் உயிரிழந்துள்ளார். இந்த சிகிச்சைக்காகவழக்கறிஞராக பணியாற்றிய ஹரி பிரகாஷ் வழக்கறிஞர் பிரபல வழக்கறிஞராக இருக்கும் ராம்ஜி உடைய சகோதரர் ஆவார்.வழக்கறிஞர் ஹரி பிரகாஷ் என்பவர் இந்த வழக்குக்கு உண்டான சாட்சிகளை கலைக்க முற்பட்டுள்ளார் ஆதலால் இந்த வழக்கை ஆய்வு செய்த தேவகோட்டை சரக டி எஸ் பி கௌதமன், தி.க.பா.பெரியார்,உதவி ஆய்வாளர் மணிகண்டன்,மற்றும் சிறப்பு ஆய்வாளர்கள்,ஒற்றாடல் பிரிவை சேர்ந்தவர்கள் மற்றும் காவல் துறையை சேர்ந்த அனைவரும் சிறப்பாகசெயல்பட்டு குற்றவாளிகளை கைது செய்து சிறையில் அடைத்தனர்.



■ சுதந்திர போராட்ட மாவீரர் வீரபாண்டிய கட்டபொம்மன் நினைவு நாளை முன்னிட்டு மதுரை பெரியார் பேருந்து நிலையம் அருகே உள்ள அவரது திருவுருவச்சிலைக்கு தமிழ்நாடு நாயுடு மகாஜன சங்கத்தின் சார்பாக மாநில துணை தலைவர் வீரராஜ் நாயுடு தலைமையில் மாநில பொருளாளர் ஆடிட்டர் சீனிவாசன் மாவட்ட நாயுடு சங்க செயலாளர் ஜெகநாதன் இளைஞர் அணி தலைவர் ராம்குமார் திருமங்கலம் சரவணன் பழனிவேல் ஜெயக்குமார் ,கணேசன், மீனீட்ஸ் ராம், மணிகண்டன் ஆகியோர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்கள்.





■ தென்காசி மாவட்டத்தில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வருகைக்கான முன்னேற்பாடு பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் ஏ.கே.கமல்கிஷோர், மாவட்ட வருவாய் அலுவலர் சீ.ஜெயச்சந்திரன் ஆகியோர் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்கள்.



## பெண்ணாத்தூர் அரசு ஆண்கள் மேல்நிலை பள்ளியில் தமிழக அரசின் நலம் காக்கும் ஸ்டாலின் திட்ட முகாம்

வேலூர், அக்.19-

வேலூர் மாவட்டம், வேலூர் தாலுகா, அணைக்கட்டு சட்டமன்றத் தொகுதி, பென்னாத்தூர் பேரூராட்சி, அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளி வளாகத்தில், தமிழக அரசின் நலம் காக்கும் ஸ்டாலின் திட்ட மருத்துவ முகாம் நடை பெற்றது. இதில் சிறப்பு அழைப்பாளர்களாக வேலூர் மாவட்ட ஆட்சியர் சுப்புலெட்சுமி, அணைக்கட்டு சட்டமன்ற உறுப்பினர் ஏ.பி.நந்தகுமார் ஆகியோர் கலந்துகொண்டு மருத்துவ முகாமை பார்வையிட்டு மாற்றுத்திறனாளி துறை சார்பில் செவி கேளாத 3 பயனாளிகளுக்கு ரூ.21,000, மதிப்பீட்டில் இரு காதுகள் பின்புறம் அணியும் நவீன காதொலி கருவிகளை வழங்கினர். மாற்றுத்திறனாளிகளுக்கான அடையாள சான்றும்வழங்கப்பட்டது.

இநிகழ்ச்சியில் வேலூர் அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனை முதல்வர் ரோகிணி தேவி, இணை இயக்குனர் (மருத்துவ பணிகள்) பரணிதரன், மாவட்ட மாற்றுத்திறனாளி அலுவலர் பாபு, வேலூர் ஆர்.டி.ஓ. செந்தில்குமார், மாவட்ட ஊராட்சிண திட்ட குழு பெருந்தலைவர் மு.பாபு, அரசு மருத்துவமனை செவிலியர் கண்காணிப்பாளர் நர்சிங் சூப்ரிண்டன்ட் கமலா, வேலூர் வட்டாட்சியர் வடிவேலு, கன்னியம்பாடி ஒன்றிய குழு துணைத் தலைவர் கஜேந்திரன், பெண்ணாத்தூர் பேரூராட்சி தலைவர் பவானி சசிகுமார், துணைத் தலைவர் ஜீவா சத்யராஜ், முன்னாள் பேரூராட்சி தலைவர் அருள்நாதன், பள்ளி தலைமை ஆசிரியர் பாலகிருஷ்ணா, பென்னாத்தூர் பேரூராட்சி செயல் அலுவலர் குருசாமி, பேரூராட்சி வார்டு உறுப்பினர்கள் தமிழரசி இளைய முருகன், தமிழ்வாணி, ஏ.கே.சுரேஷ், பவுலின் குமார், காட்டுப்புத்தூர் முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் விசுவநாதன், உள்ளிட்ட அரசு துறை அலுவலர்கள் அரசு மருத்துவர்கள் செவிலியர்கள் பணியாளர்கள் பொதுமக்கள் என பலர் கலந்து கொண்டனர்.

## காவல்துறை அறிவிப்பு

சிவகங்கை, அக்.19-

சிவகங்கை மாவட்ட தேவகோட்டை நகர காவல் நிலையத்தில் பதிவு செய்யப்பட்ட குற்ற எண் 04/2025 பிரிவு 194 BNSS @ 105, 238(c), 239 மற்றும் 62 BNS வழக்கில், தேவகோட்டை மீனாட்சி மருத்துவமனை மருத்துவர்கள் டாக்டர் ஏழுமலை மற்றும் டாக்டர் ஹாலீஸ் குமார் த/பெ ஏழுமலை ஆகியோர் அருள்மலர்செல்வி என்ற நோயாளியின் மரணத்துக்கு காரணமானதாக விசாரணையில் உறுதி செய்யப்பட்டுள்ளது.

விசாரணையின் போது, செவிலியர் படிப்பு படிக்காத வேதம்மாள் என்ற நபர் நோயாளிக்கு ஊசி செலுத்தியதும், அதன் பின் நோயாளர் உயிரிழந்ததும் கண்டறியப்பட்டுள்ளது. மருத்துவர்கள் மரணத்தை அதிகாரப்பூர்வமாக அறிவிக்காமல், தனியார் ஆம்புலன்ஸ் மூலம் உடலை வீட்டிற்கு அனுப்பியுள்ளனர். இது மருத்துவ விதிமுறைகளையும் சட்ட நடைமுறைகளையும் மீறும் கடுமையான குற்றமாகும்.

மேலும், மேற்கண்ட மருத்துவர்கள் வழக்கறிஞர் ஜெயஹரி பிரசாத் S/O நாகராஜன் தேவகோட்டை என்பவருடன் இணைந்து சாட்சிகளை கலைத்தும், ஆதாரங்களை மறைத்தும், விசாரணையைத் திசைதிருப்பும் முயற்சியையும் மேற்கொண்டுள்ளனர் என்பது விசாரணையில் வெளிச்சத்துக்கு கொண்டுவரப்பட்டுள்ளது.

சுகாதாரத்துறை இணை இயக்குநர் (Joint Director of Health Services), சிவகங்கை அவர்களின் அறிக்கையிலும், அரசு சிவகங்கை மருத்துவக்கல்லூரி வழங்கிய பிரேத பரிசோதனை அறிக்கை மற்றும் இறுதி மருத்துவ கருத்திலும், மரணம் தவறான சிகிச்சையால் ஏற்பட்டது என்பது உறுதிசெய்யப்பட்டுள்ளது. இதன் மூலம், மருத்துவ அலட்சியம் மற்றும் சட்டவிரோத செயல்கள் தெளிவாக நிரூபிக்கப்பட்டுள்ளன. இதையடுத்து டாக்டர் ஏழுமலை, டாக்டர் ஹாலஸ் குமார், வழக்கறிஞர் ஜெயஹரிபிரசாத் மற்றும் வேதம்மாள் ஆகியோருக்கு எதிராக கொலை குற்றமாகாத மரணம் விளைவிக்கும் குற்றம் மற்றும் குற்றத்திற்கான சாட்சியத்தை மறைத்தல் அல்லது குற்றவாளியை காப்பதற்கு பொய்தகவல் கொடுத்தல் போன்ற குற்றச்சாட்டு பதிவு செய்யப்பட்டு, தேவையான சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இவ்வாறான மருத்துவ அலட்சியம், ஆதாரத்தை மறை த்தல், போன்ற செயல்கள் கடுமையாகக் கருதப்பட்டு, எந்தவித தளர்வுமின்றி உரிய சட்டத்தின் கீழ் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என காவல துறைசார்பில் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.



■ சிவகங்கை மாவட்டம், சிங்கம்புணரி ஊராட்சி ஒன்றியம், மேலையூர் ஊராட்சிக்குட்பட்ட வேட்டங்குடி பறவைகள் சரணாலயத்தில் அதிக அளவிலான வெளிநாட்டு பறவைகள் வருகைபுரிந்துள்ளதையொட்டி, அப்பகுதியில் வசித்து வரும் பொதுமக்கள், தீபாவளி பண்டிகையில் அனைவரும் பட்டாசுகள் வெடிக்காமல் இருப்பதாக ஒரு மனதாக தெரிவித்துள்ள நிலையில், அவர்களை பாராட்டிடும் வண்ணம் மாவட்ட ஆட்சித்தலைவர் கா.பொற்கொடி,இ.ஆ.ப., அவர்கள், அப்பகுதி மக்களை நேரில் சந்தித்து, வாழ்த்துக்களை தெரிவித்து இனிப்புகள் வழங்கினார். உடன் வனச்சரகர் திரு.கார்த்திகேயன், சிங்கம்புணரி வட்டாட்சியர் திரு.நாகநாதன் உட்பட பலர் உள்ளனர்.

Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at "SRI SAAI PRINTERS"No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161